**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 11—35*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது பகுதிநேர ஆசிரியர்களுடைய பணிகளைப் பற்றி குறிப்பிட்டு, அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, பகுதி நேர ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக இன்றைக்குப் போராட்டம் நடைபெறுகிறது என்றும் குறிப்பிட்டார்கள். பகுதிநேர ஆசிரியர்களைப் பொறுத்தவரையிலும் முதன்முதலில் 5,000 ரூபாயில்தான் அவர்களைப் பணி அமர்த்தினோம். அதற்குப் பிறகு நம்முடைய அரசு கருணையோடு 7,000 ரூபாயாக உயர்த்தித் தந்தது. அதற்குப் பிறகு இன்றைக்கு 7,700 ரூபாயாக உயர்த்தித் தரலாம், அது மூன்று ஆண்டுகளுக்கு இருக்கலாம் என்ற காரணத்தின் அடிப்படையில் அதற்கான பணிகளை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே, ஒரு குழுவை அமைத்து ஆசிரியர் பெருமக்களை அழைத்து, என்னென்ன பணிகளை மேற்கொள்ளலாம் என்பதை அரசு பரிசீலிக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

## 3. கவன ஈர்ப்பு

### (அ) துறையூர் தொகுதி, முருங்கபட்டி வெடிமருந்து தொழிற்சாலையினால் சுற்றுச்சூழல் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

***திரு. செ. ஸ்டாலின் குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துறையூர் தொகுதி, முருங்கபட்டியில் உள்ள வெடிமருந்து தொழிற்சாலையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு*

*2017 ஜூலை 12*] [திரு. செ. ஸ்டாலின் குமார்]

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அறிக்கை**

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், த. முருங்கபட்டி கிராமத்தில் அமைந்துள்ள தி/ள். வெற்றிவேல் எக்ஸ்புளோசிவ்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 2001 முதல் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் இசைவாணையைப் பெற்று இயங்கி வருகிறது. இந்தத் தொழிற்சாலை அதன் விரிவாக்கத்திற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து 8–7–2015–ல் பின்வரும் பொருட்களைத் தயாரிக்க இசைவாணையை பெற்றுள்ளது. மேலும் இந்நிறுவனம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்மூலம் 31–3–2017 முடிய நீர் மற்றும் காற்று மாசுத் தடுப்புச் சட்டத்தின்கீழ் செல்லத்தக்க இசைவாணையையும் பெற்றுள்ளது.

| வ. எண் | உற்பத்திப் பொருட்கள் | அளவு மாதம் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1. | ஸ்லரி எக்ஸ்புளோசிவ்ஸ் (Slurry Explosives) | 1658 டன் |
| 2. | டெட்டனேடிங் பியூஸ் (Detonating fuse) | 67,00,000 மீட்டர் |
| 3. | பெண்டா எரித்திட்ரால் டெட்ரா நைட்ரேட் (Penta Erythritol Tetra Nitrate) | 7166 டன் |
| 4. | பெண்டோலைட் பூஸ்டர் (Pentolite Booster) | 16.6 டன் |
| தயாரிப்பின்பொழுது வெளிவரும் பொருள் | | |
| 1. | நீர்த்துப்போன நைட்ரிக் அமிலம் (Dilute Nitric Acid) | 20 டன் |

இந்நிறுவனத்தில் பெண்டா எரித்திட்ரால் டெட்ரா நைட்ரேட் தயாரிப்பின்பொழுது வெளிவரும் கழிவுநீர் இயந்திர நீராவியால் ஆவியாக்கப்பட்டு நீராவி ஒருங்கியதும் தோட்டத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது மற்றும் செறிவூட்டப்பட்ட திடநீர் பிளாஸ்டிக் விரிப்புகள் விரிக்கப்பட்ட சூரிய ஒளி ஆவியாதல் தொட்டியில் ஆவியாக்கப்படுகிறது. மேலும், இந்நிறுவனத்தில் கொதிகலன் மற்றும் மென்மைப்படுத்தும் பகுதியிலிருந்து வெளிவரும் கழிவுநீருக்குத் தனியாக பிளாஸ்டிக் விரிப்புகள் விரிக்கப்பட்ட சூரிய ஒளி ஆவியாதல் தொட்டியும் மற்றும் ஸ்லரி எக்ஸ்புளோசிவ்ஸ் தயாரிப்பின்பொழுது வெளிவரும் கழிவுநீருக்குத் தனியாக பிளாஸ்டிக் விரிப்புகள் விரிக்கப்பட்ட சூரிய ஒளி ஆவியாதல் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் பின்வரும் காற்று மாசுத் தடுப்பு சாதனங்களை அமைத்துள்ளது:

| புகை போக்கி எண் | மாசு வெளிப்பாடு | மாசு தடுப்பு சாதனங்கள் | தரை மட்டத்தி லிருந்து புகை போக்கியின் உயரம் (மீட்டர்) |
|---|---|---|---|
| 1. | டிநைட்ரேட்டர்–1 | புகைபோக்கியுடன்கூடிய ஈரமான ஸ்கரப்பர் | 8 |
| 2. | டிநைட்ரேட்டர்–2 | புகைபோக்கியுடன்கூடிய ஈரமான ஸ்கரப்பர் | 8 |
| 3. | டிநைட்ரேட்டர்–3 | புகைபோக்கியுடன்கூடிய ஈரமான ஸ்கரப்பர் | 8 |
| 4. | கொதிகலன் –0.6T/hr | புகைபோக்கி | 5 |
| 5. | கொதிகலன் –1.5T/hr மற்றும் 5.0T/hr | பொதுவான புகைபோக்கி | 18 |
| 6. | டீசல் ஜெனரேட்டர்–500 KVA | புகைபோக்கியுடன்கூடிய ஒலி உள்ளீடு | 5 |

இந்நிறுவனம் 18–9–2017 வரை பொது மக்கள் பொறுப்பு காப்பீடு பெற்றுள்ளது. மேலும், இந்நிறுவனம் இணை தலைமை

*2017 ஜூலை 12]* *[திரு. கே.சி. கருப்பணன்]*

*வெடிமருந்து கட்டுப்பாடு அலுவலர், சென்னை மற்றும் தொழிற்சாலை ஆய்வாளரிடமிருந்தும் அனுமதியைப் பெற்றுள்ளது.*

*கடந்த 1–12–2016 அன்று வெடி பொருட்கள் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களைக் கையாளும்பொழுது ஏற்பட்ட கவனக் குறைவினால் வெடிவிபத்து ஏற்பட்டது. அந்த வெடி விபத்தில் 19 தொழிலாளர்கள் உயிரிழந்ததாக அறிக்கை வெளியானது. இதைத் தொடர்ந்து வாரியத்தால் 16–12–2016 ஆம் நாளிட்ட நடவடிக்கைமூலம் தொழிற்சாலைக்கு மின்சாரத்தை துண்டிப்பதற்கும், தொழிற்சாலையை மூடுவதற்கும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இன்று வரை தொழிற்சாலை திறக்கப்படவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். முருங்கபட்டியில் உள்ள வெடிமருந்து தொழிற்சாலையில் ஸ்லரி எக்ஸ்புளோசிவ்ஸ், டெட்டனேடிங் பியூஸ்,பெண்டா எரித்திட்ரால் டெட்ரா நைட்ரேட்,பெண்டோலைட் பூஸ்டர் போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றிற்கு அம்மோனியம் ஹைட்ரேட், துத்தநாகம் குரோமைட், ஹைட்ரஜன் மோனோ ஹைட்ரேட், சோடியம் நைட்ரேட்,* fuel oil , *ஆக்சிடைசர் போன்ற* raw materials *பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முருங்கபட்டியில் உள்ள வெடிமருந்து தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப்பொருட்கள் தெற்கு நோக்கி உள்ள பள்ளமான பகுதியை நோக்கி வரும் நீர்வரத்து வாய்க்கால் மூடப்பட்டும் உள்ளது. இந்த நிருவாகம் 170 ஏக்கர் இடமுள்ள இந்தத் தொழிற்சாலை வளாகத்திற்குள்ளேயே போர்வெல் அமைத்து, அதன்வழியாகவே இங்கே உற்பத்தி செய்யப்படும் கழிவுகளைக் கொண்டு சேர்த்துள்ளது. அதனால் ஊரிலுள்ள கிணறுகள், ஆழ்குழாய்க் கிணறுகளில் உள்ள குடிதண்ணீர் மாசடைந்து, விவசாயமும் பாதிக்கப்பட்டுவிட்டது. இந்த ஊரில் உள்ள ஒரு போர்வெல், ஒரு மேல்நிலை நீர்த்தேக்க குடிநீர்த் தொட்டி, 2 திறந்தவெளிக் கிணறுகள் ஆகிய 4 இடங்கள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டு, மாதிரி எடுக்கப்பட்டு நீரின்* hardness *1300 முதல் 5220 வரை இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனம்–*W.H.O. *அறிவித்துள்ளபடி* total hardness

[திரு. செ. ஸ்டாலின் குமார்] [2017 ஜூலை 12

500 தான் இருக்க வேண்டும். Calcium 75% mg/L தான் இருக்க வேண்டும். ஆனால், 290 முதல் 1283 வரை இருக்கின்றது. Chlorides 200 mg/L தான் இருக்க வேண்டும். ஆனால், 210 முதல் 260 வரை இருக்கின்றது. Iron 0.1% mg/L தான் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், நீங்கள் கேள்வி கேட்கச் சொன்னால், விவர அறிக்கையை திரும்பவும் படித்துக் கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவரத்தைத்தான் சொல்கிறேன். TDS 300 முதல் 600 வரை இருக்க வேண்டும். ஆனால், இங்கேயிருக்கக்கூடிய மொத்த ஆய்வறிக்கையில் 3,962 முதல் 14,428 mg/L இருக்கிறது. எனவே, இங்கே உற்பத்தி செய்யப்படும் கழிவுகள் நிலம் மற்றும் தண்ணீரில் கலந்து வருவதால் cancer மற்றும் lungs–ல் வியாதிகள் வருவதால், மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கிரி, உங்களுக்கு அதைப் பற்றி ஏதாவது தெரியுமா? விவர அறிக்கையை நீங்கள் படித்தீர்களா? நீங்கள் உட்கார்ந்து கொண்டே பேசினால் எப்படி? அவர்தானே பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** எனவே, Tetenal–I handle செய்யும்போது 10% water content store வைத்துத்தான் செய்ய வேண்டும். இதனால் இந்தப் பகுதி மக்கள் பயன்படுத்துகிற மம்மலை கோயிலுக்குச் செல்லும் வழிகளும் மூடப்பட்டுள்ளன. வனத் துறைக்குச் சொந்தமான மந்தைவெளி 5.64 சென்ட் இடமும் இந்தத் தொழிற்சாலை வளாகத்திற்குள்ளே உள்ளது. இதனால் அங்கு தண்ணீர் குடித்த 10 ஆடுகள் இறந்து விட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், நீங்கள் கேள்வி கேளுங்கள் என்று சொன்னால், இப்படிச் செய்தால் எப்படி? பிறகு எல்லோருக்கும் எப்படி நான் வாய்ப்புத் தரமுடியும்? எப்படி நான் எல்லோருக்கும் வாய்ப்பு தருவது?

2017 ஜூலை 12]

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் கிரி, கொஞ்சம் பேசாமல் இருங்கள்.*

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** *இந்தத் தொழிற்சாலையை நிரந்தரமாக மூடுவதற்காக அரசின் கவனத்தை ஈர்க்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், கொம்பம்பட்டி பகுதியில் தலுவை வஜ்ராவைச் சேர்ந்த முருங்கபட்டி கிராமத்தில் வெற்றிவேல் எக்ஸ்புளோசிவ்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 2001 முதல் இயங்கி வருகிறது. இந்தத் தொழிற்சாலை வெடிபொருளைத் தயாரித்து வருகிறது. இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் கழிவு நீரானது ஒரு பகுதி சூரிய ஒளிமூலம் ஆவியாக்கப்பட்டும், மீதமுள்ள தண்ணீர்* Air riser *மூலம் சுத்தப்படுத்தப்பட்டும், அங்குள்ள தோட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

*முற்பகல் 11–40*

*கடந்த 1–12–2016 அன்று காலை ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக பல உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அதற்குப் பிறகு, அங்கிருந்த வெடி பொருட்கள், நைட்ரிக் அமிலங்கள் போன்றவை வெடி கட்டுப்பாட்டாளர்கள்மூலம் வேறிடத்திற்கு மாற்றப்பட்டு, பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. வெடி பொருட்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு, எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பொது மக்களிடமிருந்து எந்தவொரு புகாரும் பெறப்படவில்லை. இந்தத் தொழிற்சாலைக்கு 16–12–2016 முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள்.*

**திரு. செ. ஸ்டாலின் குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த டிசம்பர் 1 ஆம் தேதி முதல் இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. இந்தத் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தினால் 19 பேர் உயிரிழந்துள்ளார்கள். தமிழ் சினிமாவில்,

வீடு வரை உறவு, வீதி வரை மனைவி,
காடு வரை பிள்ளை, கடைசி வரை யாரோ?

என்ற ஒரு பாடல் உள்ளது. ஆனால், இந்த வெடி விபத்தில் இறந்த 19 பேரின் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியது. அதாவது, இந்த 19 பேருக்கும் இறந்தவுடன் செய்யக்கூடிய இறுதிச் சடங்கைக்கூட செய்ய முடியவில்லை. வெறும் ஒரு கைப்பிடி மண்தான் கிடைத்தது. 7 மாதங்களாகியும், இறப்புச் சான்றிதழ் இறந்தவர்களுடைய குடும்பத்தாருக்கு இதுவரை வழங்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட R.D.O. அவர்கள், "இந்த 19 பேரும் பச்சைமலையில் உயிருடன் வாழ்கிறார்கள்" என்று கூறி, Death Certificate தர மறுக்கின்றார். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, 19 பேர்களின் குடும்பத்தாருக்கும் 10 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியை வழங்கவும், இறந்தவர்களுடைய குடும்பத்திலுள்ள நபர் ஒருவருக்கு அரசு வேலை வழங்கவும் வேண்டுமென்று அரசினுடைய கவனத்தை ஈர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிந்த அனைவருக்கும் இன்சூரன்ஸ் போடப்பட்டுள்ளது. இன்சூரன்ஸ் மூலமாக அவர்களுக்குப் பணம் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் அனைத்தையும் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் முன்வைத்த கருத்தை என்னுடைய கவனத்திற்கும் ஏற்கெனவே கொண்டு வந்திருந்தார்கள். அங்கே கோட்டாட்சியர் அவர்கள் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். "இன்னொரு இடத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற முரண்பட்ட தகவலைச் சொல்கிறார்" என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக இதுபோன்ற சடலங்கள் கிடைக்கிறபோது, உடனடியாக உடற்கூறு ஆய்வு செய்யப்பட்டு, இறப்புச் சான்றிதழ் உடனடியாக வழங்கப்படுகிறது. அங்கு சடலங்கள் கிடைக்காதபட்சத்தில், அங்கே வேலை பார்த்த பதிவுகளையெல்லாம் வைத்து, காவல் துறையினுடைய விசாரணை முழுமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. காவல் துறையினுடைய முழுமையான விசாரணைக்கு ஒரு குறிப்பிட்ட கால அளவு இருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும், இந்த அவையிலுள்ள மற்ற அனைவருக்கும் தெரியும். பொதுவாக இதுபோன்ற நேரங்களிலே, காவல் துறையினுடைய விசாரணை முடிவுற்ற பிறகு, இறந்தவர்களுடைய குடும்பத்தாருக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கப்படும். அதற்குப் பிறகு, அவர்களுடைய வாரிசுதார்களை, legal heirs–ஐ கோட்டாட்சியர் அவர்கள் உறுதி செய்ததற்குப் பிறகு, அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு நிச்சயமாக இழப்பீடு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) மதுரை, கே. புதூர் சிட்கோ தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா.

**திரு. வி.வி. இராஜன் செல்லப்பா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை, கே. புதூர் சிட்கோ தொழிற்பேட்டையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது" குறித்த அவசரப் பொது

## 3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) துறையூர் தொகுதி, முருங்கபட்டி வெடிமருந்து தொழிற்சாலையினால் சுற்றுச்சூழல் பாதிப்பு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள், உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்களுக்கு ஒரு விளக்கத்தைத் தெரிவிக்கின்றார்.*

**மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மிடத்திலே மறைந்தும் மறையாமலும், நம் இதயங்களிலெல்லாம் வாழ்ந்துகொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில், வெடி விபத்தில் உயிரிழந்த அனைவருக்கும் ரூ.3 இலட்சமும், அதேபோல வெடி விபத்தில் காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் திருமதி சீ. வளர்மதி அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், அண்ணன் திரு. வெல்லமண்டி ந. நடராஜன் அவர்களும், மாவட்ட ஆட்சியர் அவர்களும், அவர்கள் வீடுகளுக்கு நேரிலே சென்று வழங்கியுள்ளனர் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

## 5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு சங்கங்கள் பதிவு (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு (திருத்தம்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு (திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*